ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2095/48 - 2018 නොවැම්බර් මස 02 වැනි සිකුරාදා - 2018.11.02

*2095/48 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 5 ஆம் திருத்தம்

இலங்கை நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2013, திசெம்பர் மாதம் 23 ஆந் திகதிய 1842/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட 2015, யூலை மாதம் 16 ஆந் திகதிய 1923/47 ஆம் இலக்க, 2016, ஒகத்து மாதம் 11 ஆந் திகதிய 1979/33 ஆம் இலக்க, 2018, ஒகத்து மாதம் 30 ஆந் திகதிய 2086/22 ஆம் இலக்க, 2018, ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதிய 2095/9 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வருமாறு திருத்தியமைக்கப்படுதல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

எம். ஏ. பி. தயா செனரத்,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு,
2018, நவெம்பர் 02.

இலங்கை நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் 13.3 (ஆ) பந்தி பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது :

13.3 (ஆ) **பதவியுயர்வு வழங்கப்படும் முறை**.- மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தரொருவருக்கு ஒவ்வொரு வருடமும் யூலை மாதம் 01 ஆந் திகதி மற்றும் சனவரி மாதம் 01 ஆந் திகதியன்று நிலவும் வெற்றிடங்களுக்கு ஏற்ப அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விசேட தரத்துக்கு பதவியுயர்வு வழங்கப்படும்.

**குறிப்பு** :

(1) வெற்றிடங்கள் கணக்கிடப்படும் திகதிக்கு தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் சேவை மூப்புக்கு அமைய வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 25% ஆன அளவு ஆகிய இரண்டினதும் கூட்டுத்தொகையாக வரும் எண்ணிக்கையை விஞ்சாத 13.3(அ) இல் உள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

1A - G 28845 — 32 (2018/11)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(2) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் உத்தியோகத்தர்களின் அடிப்படைத் தகைமைகள் மற்றும் சேவை மூப்பு என்பன மாத்திரம் நேர்முகப் பரீட்சை சபையினால் பரிசீலிக்கப்படும்.

(3) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட நேர்முகப் பரீட்சை சபையினால் சமர்ப்பிக்கப்படும் சிபாரிசுகளுக்டகு அமைய வெற்றிடங்கள் கணக்கிடப்படும் தினத்தில் 1 ஆம் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களின் சேவை மூப்பு ஒழுங்கு முறைக்கு அமைய விசேட தரத்தில் நிலவும் வெற்றிடங்களுக்குச் சமமான எண்ணிக்கையைக் கொண்ட உத்தியோகத்தர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விசேட தரத்திற்கு பதவி உயர்த்தப்படுவர்.

*11-770*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.